RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s514

OPEN ACCESS

# கலைவாணரின் கலை செயல்பாடுகள்

## அ. சேதுபதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Art Activities of Kalaivanar's

## A. Sedhupathi [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: sedhupathiphdtamil@gmail.com

Received: 18-07-2021
Revised: 23-04-2022
Accepted: 27-04-2022
Published: 13-07-2022

Check for updates

### ABSTRACT

The Kalaivanar in the artist's performance and the deep ideas in the verse are told through this article. Beyond acting, there are a lot of comments and verses spoken on the screen for the people. Be an example of how to be an artist in the film industry. She has made helping others the most important part of her life. This article covers the social work of the artist with such specialties, reform ideas and awareness created through humor. A family, a community, a student's education system, women, education, alcoholism, and many other messages can be constructed through the screen.

**Keywords:** Kalaivanar, Artist's, Family, A Community, A Student's Education System

## முன்னுரை

குமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த ஒழுகினசேரி ஊரைச் சார்ந்தவர். சுடலைமுத்து இசக்கியம்மாள் பெற்றோர்கள், 1908 ஆம் ஆண்டு நவம்பர் 29 அன்று பிறந்தார். சிறுவயதில் மிகவும் சுட்டித்தனமானவர். இவர் தமிழையும் மலையாளத்தையும் பாட மொழியாகப் படித்தவர். குடும்ப வறுமை காரணமாக 5-ஆம் வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. சுடலைமுத்து தபால் துறையில் வாகன ஓட்டுநராகப் பணியாற்றினார். தாயார் இசக்கியம்மாள் வீட்டிலேயே சிற்றுண்டிச் சாலை வைத்தார். கலைவாணரும் மளிகைக்கடைகளில் பொட்டலம் போடுவது பலூன் விற்பது, சோடா விற்பது போன்ற சிறிய சிறிய வேலைகளைச் செய்து வந்தார். கலைவாணர் வசித்து வந்த வீட்டின் அருகே பிரபல நாடகக் கொட்டகை ஒன்று இயங்கி வந்தது.

சோடா விற்கும் சாக்கில் அந்த நாடகத்தைப் பார்த்து விட்டு அதன் கருத்துக்களை மனதில் பதிய வைப்பார். பின்னர் அத்தெருவில் உள்ள சிறுவர்களைக் கூட்டித் தான் கண்ட நாடகத்தை அப்படியே நடித்துக் காட்டுவார் (Arignar Annaa, 2009). கலைவாணரின் நாடக ஆர்வத்தைக் கண்ட அவரின் தந்தை பல எதிர்ப்புகளைத் தாண்டி 1924-ல் ஒரு பாய்ஸ் நாடகக் கம்பெனியில் (நாகர்கோயில்) சேர்த்து விட்டார்.

நாடகத்தைப் பற்றி அறியாத இத்தலைமுறைக்கு பாய்ஸ் கம்பெனி பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். அந்தக் காலத்தில் நாடக உலகின் ஜாம்பவான் என்று அழைக்கப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகள் முழுக்க முழுக்க ஆண் சிறுவர்களை வைத்து மட்டும் நாடகங்களை நடத்தி வந்தார். இதன் விளைவால் பல பாய்ஸ் கம்பெனிகள் உருவாகத் தொடங்கியது. நாடகக் கம்பெனியில் டி. எஸ். துறைராஸ் நட்பு கிடைத்தது.

1936-ம் ஆண்டு வெளிவந்த சதிலீலாவதி திரைப்படத்தில் அறிமுகமானார். அவர் நடித்த முதல் நாடகம் சத்தியவான் சாவித்திரி. இசைக் கருவிகளையும் வாசிக்கத் தொடங்கினார். அன்றைய காலகட்டத்தில் சுதந்திர வேட்கை அதிகமாக காணப்பட்டது அப்படி ஒரு நாளான மார்ச் 24-1931 லாகூரில் பகத்சிங், ராஜ்குரு, சுகுதேவ் ஆகிய மூவரையும் தூக்கிலிட்ட நாள் இச்செய்தி தமிழ்நாட்டையே உலுக்கியது. டி.கே. முத்துச்சாமியும், என். எஸ். கிருஸ்ணனும் தீவிரமான தேச பக்தர்கள், நாட்டு மக்களிடையே தேச பக்தியை வளர்க்க நாடகம் ஒன்றை புதிதாகத் தொடங்க முடிவு செய்தனர்.

அதன்படி ஆங்கிலேய ஆட்சியால் தடை செய்யப்பட்ட பானபுறத்து வீரன் என்னும் கதையை தேசபக்தி எனும் புதுப்பெயர் சூட்டி, பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள் மற்றும் கவிதைகளைச் சேர்த்து ஒரு புதுமையான நாடகத்தை அரங்கேற்றினர். அக்காலத்தில் பாரதியாரின் கவிதைகளை நாடக அரங்கில் அரங்கேற்றிய பெருமை என். எஸ். கே-வைச் சாரும். 1931 மே 19 அன்று தேசபக்தி நாடகம் அரங்கேறியது. முதல் பேசும் படம் காளிதாஸ் அமோக வெற்றி. 1935-ல் மேனகா வெளிவந்தது. 1936-ல் சதிலீலாவதி வெளிவந்தது. கலைவாணரின் சொந்தப் படமான மணமகள் என்ற படத்தில் பத்மினியை அறிமுகம் செய்கிறார். என். எஸ். கிருஷ்ணனின் கொடைத் தன்மைக்கு அளவே கிடையாது. இல்லை என்று வருபவர்களுக்கு வாரி இசைத்தவர். இதைப் பற்றி கூறுகையில் “நான் மக்களால் உயர்ந்தவன் எனவே அதை அவர்களுக்கே திருப்பிக் கொடுப்பதான் நியாயம் என்று கூறினார்.

## கொடைத் தன்மை

ஒருமுறை என். எஸ்.கே. தனது வீட்டில் படக்குழுவோடு ஆலோசனை செய்து கொண்டிருந்தார். அப்போது ஒருவர் தனது குடும்பக் கஷ்டத்தைச் சொல்லிப் புலம்பித் தீர்த்தார். அப்போது என். எஸ்.கே. அவர்கள் தனது சட்டைப் பையில் இருந்த பணத்தை எண்ணிப் பார்க்காமல் அப்படியே எடுத்துக் கொடுத்தவர் கலைவாணர்.

தயாரிப்பாளர் என். எஸ்.கே. நடிக்க மட்டும் செய்த என். எஸ்கே. தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங்கி படங்களைத் தயாரித்தார். (கே. ஆர். இராமசாமி), (கே. ஏ. தங்கவேலு), (எஸ்.வி. சகசுரநாமம்), (கா.க. இராதாகிருஷ்ணன்), (டி. எஸ். பாலய்யா), (துரைராஜ் (வி.கே. இராமசாதி), பத்மினி, தமிழகமெங்கும் வெற்றி நடைபோட்ட மணமகள் படத்தில் அருமையாக நடித்த டி. எஸ். பாலய்யாவுக்கு தனது (பியூக் காரை) பரிசாக அளித்தார்.

சேலம் மார்டன் தியேட்டரில் என். எஸ்.கே. நடித்துக் கொண்டிருக்கும் தான் கலைஞர் கருணாநிதி அறிமுகமானார். இவரின் படைப்பில் மிக முக்கியமானது. 1.கிந்தநார் 2. ஐம்பதும் அறுபதும், வரலாற்றில் தலித் நாயன்மாராக கருதப்பட்ட நந்தனாரை கிந்தனார் என மாற்றி சமூகத்தில் நிலவும் சாதிய அவலத்தை எடுத்துரைத்தார். ஐம்பதும் அறுபதும் என்ற படைப்பில் நமது சமூகம் வருங்காலத்தில் விஞ்ஞான அறிவால் சீர் பெற்று செழிப்புப் பெறும் என்று தனது ஆசையைக் கற்பனையாக விவரித்திருப்பார்.

உடல்நிலை சரியில்லாத நேரத்தில் கூட கலைவாணர் இவ்வாறு கூறுகின்றார் (நான் உயிரோடு இருந்தாலும் இவர்கள் என்னை உயிரோடு இருக்கவிட மாட்டார்கள் இவர்களுக்காக நான் சாக வேண்டும் என்று நகைத்தார்.

**பாடல்** - 1

“பன்னிய வேலைக்குப் பலன் தருவது ஒன்னிலே - மனுச

படாத பாடு படுவது இருபத் தொன்னிலே.

தென்பழனி திருப்பதிக்கும் ஸ்ரீ ரங்கம் போவதற்கும்

சில்லறையைப் போட்டு வைப்பார் தேதி ஒன்னிலே

அன்புடனே போட்டு வைத்த உண்டியல் வாயைக் கொஞ்சம்

அகலமாக்கி ஆட்டிப் பார்ப்பார் இருப்பத் தொன்னிலே.

சினிமா டிராமா காட்சிகளுக்கு டிக்கட் கிடைக்கா தொன்னிலே

தியேட்டர் காலி ஆளிருக்காது இருபத்தொன்னிலே

நண்பர் நடமாட்டமெல்லாம் ஒன்னிலே - எந்த

நாயுமெட்டிப் பார்க்காது இருபத் தொன்னிலே.”

இந்த பாடல் இடம் பெற்ற திரைப்படம் முதல் தேதி

**பாடல்** - 2

“கலை என்றால் கலையுமாகும், கலைத்தலுமாகும்.

மலை என்றால் மலையுமாகும், மலைத்தலுமாகும்

தொலை என்றால் தொலையுமாகும், தெலைத்தலுமாகும்

நிலை என்றால் நிலையுமாகும், நிலைத்தலுமாகும்

1 கண்ணே உன்னால் நான் அடையும் கவலை கொஞ்சமா
இதைக் கண்டு சும்மா இருக்க உனக்கு கல்லு நெஞ்சமா
2 தங்கமே உன் தயவை நான் பெறுவேனோ என்று தான் பெறுவேனே
என் அங்கம் குளிர வாரி அனைத்து அகம்மகழ்வேனோ.
3 தேனே உன்னைத் தேடித் தேடித் நான் அலைந்தேனே - நீ

தெரியும் படி என் அருகில் இருந்தும் தொடப் பயந்தேனே. (அம்பிகாபதி)”

தன் ஆசைக் காதலிக்காக கேலி கிண்டலுடன் பாடிய ஒரு அருமையான காதல் பாடல்.

## சிரிப்புக்கு இப்படியொரு விளக்கம்

என். எஸ்.கே. அவர்கள் எல்லா பிறவிங்கள்ளேயும் மானிடப் பிறவிதான் மிகச் சிறந்தது என்று சொல்றாங்க. (அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்னும் பாடல் கூட உண்டு). ஆனா, மனிதன் எதிலே சிறந்தவன் புலி - மனிதனை விடை ரொம்ப அழகா இருக்கு. குரங்கு - நம்ம விட நல்லா நடக்குது.

குருவி - நம்ம விட நல்லா கூடுகட்டுது. எனவே மனிதன் உயர்ந்தவன் என்றால் அழகால் அல்ல, நடையால் அல்ல, திறமையால் அல்ல, சிரிப்பால் மட்டுமே மனிதன் உயர்ந்தவனாகிறான், மற்ற பிராணிகளுக்கும், சந்தோஷம் உண்டு! ஆனால் சிரிக்கத் தெரியாது. நாய் கூட ஆனந்தத்திலே வாலை ஆட்டுது, ஆனா சிரிக்கத் தெரியாது என்று 1948-ம் ஆண்டு மார்ச் 5-ம் நாள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்ற விழாவில் சிறப்புரையாற்றி போதுதான் சிரிப்பு பற்றி இப்படி ஒரு விளக்கம் அளிக்கிறார் என். எஸ்.கே (Aranthai Narayanan, 2009).

1956-ல் இந்திய பேசும் திரைப்படத்தின் 25-ம் ஆண்டு விழா சென்னையில் நடந்தது. ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்த கூட்டத்திலே” லேடீஸ் & ஜென்டில் மேன்” என்று என்.எஸ்.கே பேச்சைத் துவங்கியதும் இவர் ஆங்கிலத்தின் பேசப் போகிறார் என்று சொல்லி கூச்சலிட்டனர். பிறகு அவ்வளோதான் எனக்குத் தெரிந்த ஆங்கிலம் என்று சொன்னார்.

## கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கை.

என்.எஸ்.கே-வின் கணக்கரிடம் வருமானவரிக்காரர் கணக்கு ஏட்டைக் காட்டும் போது அதில் அனைத்துப் பக்கங்களும் தர்மம், தர்மம் என்று எழுதியுள்ளது. அதைச் சந்தேகப்பட்ட வருமான வரித்துறை அதிகாரி மாறு வேடத்தில் வந்து தனது மகளின் திருமணத்திற்காக பணம் கேட்டு வந்தார்

உடனே தன் கணக்கரிடம் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்தார். உடனே என்.எஸ்.கே-வின் காலில் விழுந்தார் அதிகாரி, நீங்கள் கிருஷ்ணன் இல்லை கர்ணன் என்ற சொல்லி காலில் விழுந்தார்.

நாடகக் குழுவுடன் ஆலோசனைக் கூடத்தில் நாடகக்குழு சேர்ந்தவர் ஒருவர் தனது குடும்பப் பிரச்சனையைச் சொல்லி புலம்பித் தீர்த்தார். தனது சட்டைப் பையில் உள்ளதை எண்ணிப் பார்க்காமல் எடுத்துக் கொடுத்தார் (Nalladhampi, 2017).

நான் மக்களால் உயர்ந்தவன், எனவே அவர்களுக்குத் திருப்பிச் செய்வதுதான் தர்மமாகும் என்றார் என். எஸ்.கே. நாடகக் கம்பெனி கடும் நஷ்டத்தில் இயங்கிய போதும் நாடகக் கலைஞர்கள் யாரும் வறுமையின் பிடியில் மாட்டி விடக் கூடாது என்பதற்காக நாடகங்களை இறுதி வரை நடத்தி வந்தார்.

**பாடல் - 3**

"குடி கெடுத்த

குடி ஒழிஞ்சுது

அடிதடி சண்டை

அதுங் கொரஞ்சுது

ஆணும் பெண்ணு

புத்தியரிஞ்சுது

நம்ம நாட்டிலே

அக்டோபர் 2-க்கு மேலே

தாலிக் கயிறு தனியா இருக்கும்

தங்கமிருக்காது அதிலே தங்கமிருக்காது

தண்ணி குடிக்கத் தகர பவள

செம்புமிருக்காது வீட்டிலே செம்புமிருக்காது.

பாலு வாங்க கொழந்த பசிக்கு பணமிருக்காது

பாலுங் கல்லுக் குடிப்பது மட்டும் நாலுந் தப்பாது

எந்த நாலுந்தப் பாது - என். எஸ்.கே. பாடல்

மனுசனாகிப் போனே இப்போ நா மனுசனாகிப் போனே

பனைமரப் பாலு

பட்டை பிராந்தி

பக்கம் வந்தா

எடுக்குற வாந்தி

வரண்ட கார வடை வாத்து

முட்டைக் கருவாட்டைத் திண்ண

வாய் நாத்தம் நீங்கி நான்

மனுசனாகிப் போனேன்

மனுசனாகிப் போனே இப்போ நா மனுசனாகிப் போனே

இரண்டாம் தேதி வருவதற்கு முன்னே

அக்டோபர் மாதம் 2-ம் தேதி வருவதற்கு முன்னே

என் கண்ணுக் குன்னை இரண்டாலாகத் தெரிஞ்சுது கண்ணே

சுருண்டு சுருண்டு நா அம்மா படுத்த சுதிய விட்டுக் கூட பாட்டுப் படிச்சே"

(மதுவிலக்கு)

**பாடல் - 4**

"அந்நியர்கள் நம்மை ஆண்டது

அந்தக் காலம்

நம்மை நாமே ஆண்டு கொள்வது இந்தக் காலம்

பேசுவதற்கும் உரிமையற்றது அந்தக் காலம்.

பிரச் சாரப் பெருமையுற்றது இந்தக் காலம்

மனுசன மனுச ஏச்சுப் பொழச்சது அந்தக் காலம்

மடமை நீங்கி பொதுவுடமை கூறுவது இந்தக் காலம்.

எதையும் நேரில் பார்த்து நிச்சயிப்பது இந்தக் காலம்.

மழை வருமென்றே மந்திரம் சொன்னது அந்தக் காலம்.

மழையைப் பொழிய வைக்கவே எந்திரம் வந்தது இந்தக்காலம்

மக்களை இழுத்து அனச்சு முயற்சி பன்னுவது இந்தக் காலம்

திரௌபதி தன்னைத் துயிலை உறிஞ்சது அந்தக் காலம்

பெண்ணைத் தொட்டுப் பார்த்தா சுட்டுப் புடுவா இந்தக்காலம்

சாஸ்த்திரம் படிப்பது அந்தக் காலம்

சரித்திரம் படிப்பது இந்தக் காலம்

குணத்தைப் பார்ப்பது அந்தக் காலம்

பக்தி முக்கியம் அந்தக் காலம்

படிப்பு முக்கியம் இந்தக் காலம்

கத்தி தீட்டுவது அந்தக் காலம்

புத்தி தீட்டுவது இந்தக் காலம்

பெண்ணைப் பேயென பேசியனச்சது அந்தக் காலம்

வாழ்வில் கண்ணில் ஒன்றாய் எண்ணி நடப்பது இந்தக் காலம்"

(அந்தக் காலம் - இந்தக் காலம்)

**பாடல் -5**

"எங்கே தேடுவேன் பணத்தை எங்கே தேடுவேன்

உலகம் செழிக்க உதவும் பணத்தை எங்கே தேடுவேன்

அரசர் முதல் ஆண்டியும் ஆசைப்படும் பணத்தை எங்கே தேடுவேன்

கருப்பு மார்கெட்டில் கலங்குகின்றாயோ

கஞ்சன் கையிலே சிக்கிக்கொண்டாயோ

கிண்டி ரேசிலே சுற்றி கிருகிருத்தாயோ

அண்டின போர்களை இரண்டும் செய்யும் பணத்தை எங்கே தேடுவேன்.

புமிக்குள் புதைந்து புதயலானாயோ

பொன்னகையாய்பெண் மேல் தொங்குகின்றாயோ

சாமி களடிகளின் சரண் புகுந்தாயோ

சந்நியாசி கோலத்தோடு உலவுகின்றாயோ

திருப்பதி உண்டியலில் சேர்ந்து விட்டாயோ

திருவண்ணாமலை குகை புகுந்தாயோ

இருப்புப் பெட்டிகளில் இருக்கின்றாயோ

இறக்கம் உள்ளவரிடம் இருக்காத பணத்தை எங்கே தேடுவேன்.

தேர்தலில் சேர்ந்து தேய்ந்து போனாயோ

தேக சுகத்துக்காக ஊட்டி சென்றாயோ

சுவற்றுகுல் தங்கமாய் புதைந்து விட்டாயோ

எங்கே தேடுவேன் பணத்தை எங்கே தேடுவேன். (பணம்)"

## பெண் கல்வி

என். எஸ்.கே. இல்லத்திற்கு தபால்காரர் ஒருவர் வருகின்றார். டி.எ. மதுரம் என்.எஸ்.கே. அவர்களின் மகன் மணியாடர் ஒன்றை அனுப்பி வைக்கிறார். அந்த மணியாடரில் நான் அனுப்பும் பணம் ரூ.500யையும், நான் கொடுக்கும் 5 கிஸ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று மகன் அனுப்பி வைக்கிறான். இதைக் கொண்டு வந்த தபால்காரனிடம் படித்துக் காட்டுகிறான். அதற்கு மதுரம் சரிப்பா மணியாடர்ல வந்த பணம் ரூ.500-யை குடுத்துட்ட 5 கிஸ் எப்போ குடுப்பனு தபால்காரன பாத்து மதுரம் கேட்கிறாள் (Nalladhampi, 2017). இதையெல்லாம் உள்ளே அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த என்.எஸ்.கே அவர்கள் வெளியே வந்து தபால்காரனை நீ போப்பா என்று சொல்லிவிட்டு, இதுக்கு தாண்டி பொம்பளைங்க படிங்க, படிங்கனு தலை தலையா அடுச்ச யாராச்சும் கேட்டிங்களா என்று நகைச்சுவையோடு கேட்டார்.

**பாடல் - 6**

“காக்கிச் சட்டக் காரனையும் கண்டேனுங்க - அந்த

கதர்ச் சட்டக் காரனையும் கண்டேனுங்க

கலவானிப் பசங்களையும் கண்டேனுங்க - அந்த

கருப்புக் குல்லாக்களையும் கண்டேனுங்க - அங்க

உணவுப் பஞ்சம் ஏதுங்க

உடைப் பஞ்சம் ஏதுங்க

காய்ச்சலுனா டாக்டர் ஒடியாந்துருவாருங்க

சாப்பிடச் சொல்லி பிள்ளைகளை பெத்தவங்க போல பிரியம் காட்டுராங்க நம்புங்க."

(சிறைச்சாலை அனுபவப் பாடல்)

**பாடல்** - 7

"இன்னைக்கு காலையில் எழுந்துருச்சு
கஞ்சித் தன்னி இல்லாம கஸ்டப் படுகுறேனே - கடவுளே
கொஞ்ச கண்ணத் தொரந்து பாரு கடவுளே - என்னைய
இப்பொறப்பு பொறக்க வச்ச கடவுளே.

அண்ண கட்டுமரம் கட்டிக்கிட்டு
கயிறு வலை எடுத்துக்கிட்டு
கடலோரம் போனானே - கடவுளே
அண்ண காணாம போயிட்டானே - கடவுளே
நானும் காத்திருந்து பார்த்தேனே - கடவுளே

அண்ண பொண்டாட்டி புள்ள குட்டி
பொலைக்க என்ன செய்வாங்க புயல் காற்று வந்ததாலே - கடவுளே
அண்ண போனவ திரும்பலையே கடவுளே

அண்ண ஆத்தியிலே தூண்டி போட்டு அதுல ரண்டு
மீன் கெடச்சா அரை வயித்துக் கஞ்சிக்காகும் - கடவுளே
குடும்பம் ஆளா பறக்குதய்யா கடவுளே
குடும்பம் ஆளா பறக்குதய்யா கடவுளே" (மீனவர்களின் வாழ்க்கை பாடல்)

ஆழ்கடலுக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பும் ஒரு ஆண் மகனுடைய நிலைமையை இப்பாடல் மூலம் தெளிவாக விளக்கினார். அவனுடைய மனைவி, குழந்தைகள் எல்லாம் அவன் வரவை எதிர்பார்த்துக் கரையில் நின்றிருக்கும். ஆழ்கடலில் ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றங்கள், அவற்றால் மீனவ மக்களுக்கு நேர்கின்ற இன்னல்களை எல்லாம் இப்பாடல் வரிகளின் மூலம் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார் (Balasubramanian, 2012).

## அறிஞர் அண்ணாவுக்காக என். எஸ். கே-வின் தேர்தல் பரப்புரை

அண்ணாவை எதிர்த்து போட்டியிடுபவர் ஒரு மருத்துவர். தான் சொல்லுவது எதிர்த்துப் போட்டியிடுகின்ற மருத்துவரை பாதித்து விடக்கூடாது. அண்ணாவையும் உயர்த்திப் பேச வேண்டும். மருத்துவர் நல்லவர், கைராசிக்காரர், தீராத நோயையும் தீர்த்து வைப்பவர். என்றெல்லாம் பேசி இவர் சட்ட சபைக்குச் சென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? எனவே அண்ணாவை வெற்றி பெறச் செய்து அவரை சட்ட சபைக்கு அனுப்புங்கள் என்று கூறினார் (Aranthai Narayanan, 2009).

## வேலையில்லாத திண்டாட்டம்

பரிந்துரை கடிதம் தன் மாமனாரிடம் பெற்றுக் கொண்டு அலுவலகத்திற்கு கோட், சூட், சிகிரெட் உடன் உள்ளே நுழைகிறார். மேனஜர் வணக்கம் போட்டு அவரை உள்ளே அழைக்கிறார். எனக்கு இந்த வேலை வேண்டாம். வேலையில்லாத இளைஞர்களுக்குக் கொடுங்கள் என்றார் என்.எஸ்.கே.

## மாணவர்கள் பாடத்தை கவனிக்க வேண்டும் (படம்-சிவகவி)

குருகுலக் கல்வி பயில்தல், பாடம் நடத்திய பிறகு தலைல நொலஞ்சுருச்சா என்றார். உடனே என். எஸ்.கே. எழுந்து தலை, வயிறு, எல்லா நொலஞ்சுருச்சு. இன்னும் வாலு மட்டும் நொலைல. பெருச்சாலி உள்ளே நுலைந்து வால் மட்டும் வெளியே. நம் நாட்டில் கல்விக்கான சூழல் சரியில்லை என்பதை அன்றைக்கே சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்ணதாசன் கலைவாணரைப் பற்றிக் கூறுகையில், என். எஸ். கிருஷ்ணன் என்றால் நகைச்சுவைக் கிருஷ்ணன் என்றார். கலைஞர் கலைவாணரைப் பற்றிக் கூறுகையில், அண்ணாவின் கருத்துக்களைக் கூறிய முதல் பிரச்சார பீரங்கி என்று சொன்னார்.

## முடிவுரை

மக்களுக்காக வாழ்ந்தவர் கலைவாணர் என். எஸ். கே அவர்கள். அவருடைய சமூகப் பணி என்பது அனைவராலும் போற்றி வணங்கப்பட்ட ஒன்று. அதிலும் நகைச்சுவை கலந்த கருத்துக்கள் மேலானவை. ஒரு கலைஞன் என்றால் தன்னுடைய கலை உள்ளம் வற்றுவதற்கு முன்பு இறந்து விடவேண்டும் என்று கூறுவார் என். எஸ். கே அவர்கள். கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரம் என்று புரட்சித் தலைவரைக் பற்றிக் கூறுவோம். அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர் அவர்களுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்கள் என். எஸ்.கே அவர்கள். அவர் வாழும் நாளில் தன் மனைவி டி.ஏ. மதுரத்திடம் நான் 50 வயதுக்குள்ளாக இறந்துபோக வேண்டும் என்று அடிக்கடி கூறுவது வழக்கம். அவர் கூறியவாரே 1957 ஆகஸ்ட் தனது 49 வது வயதில் உடல்நலக் குறைவால் இறந்துபோனார் அவர். 1957 ஆகஸ்ட் 30 மன்னை விட்டு மறைந்தாலும் அவருடைய பெயரும் புகழும் சீர்திருத்தக் கருத்தும் நகைச்சுவை கலந்த பேச்சும் இன்றளவும் நம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தவழ்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

## References


Aranthai Narayanan, (2009) Nagareega Komaali N.S.Krishnan, New Century Book House Pvt. Ltd., Chennai, India.

Arignar Annaa, (2009) Arignar Annavin Kalathai Venra Kalaivanar, Gowra Publications, Chennai, India.

Balasubramanian, M., (2012) Kalaivanar N.S.K, Va.U.Si Noolagam, Chennai, India.

Krishnan, N.S. Caminatan, P.K., Paramacivan, K., (1999) Kalaivanar Kanda Russia, New Century Book House Pvt. Ltd., Chennai, India.

Nalladhampi, (2017) Kalaivanar Sinthanai Thuligal, Kavitha Publication, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License